# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை : திரு. செ. தேவராஜன், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 14 /2018**

திரு. தா.பெ. சுப்புராம்,
த/பெ தாந்தோனி பெருமாள்,
கோபால்பட்டி,
வேம்பார்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் கிழக்கு வட்டம்,
திண்டுக்கல் – 624 308. .. . . மேல்முறையீட்டாளர்
( திரு. தா.பெ. சுப்புராம்)

எதிர்

1) செயற் பொறியாளர்,
தெற்கு/திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சி நாயக்கன்பட்டி போஸ்ட்,
திண்டுக்கல்–624 002.

2) உதவி செயற் பொறியாளர்/நத்தம்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணைமின் நிலைய வளாகம்,
கொட்டாம்பட்டி ரோடு, நத்தம்,
திண்டுக்கல்624 401. . . . எதிர்மனுதாரர்கள்
திரு. S. ராமன், உதவி செயற்பொறியாளர்/நத்தம்(i/c)

**கேட்புரை நாள் :21–6–2018**

**ஆணை நாள் : 27.8.2018**

திரு. தா.பெ. சுப்புராம், த/பெ தாந்தோனி பெருமாள், கோபால்பட்டி, வேம்பார்பட்டி அஞ்சல், திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல் – 624 308 அவர்களின் 27.2.2017 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 14/2018 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது

மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை **21.6.2018** அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>**ஆணை**</u>

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

மேல்முறையீட்டாளர் தன்னுடைய நிலத்திற்கு விண்ணப்ப பதிவு எண்.**248/1992–1993**க்கு விவசாய மின் இணைப்பு வேண்டி முறையிட்டுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

**2.1** மேல்முறையீட்டாளர் தன்னுடைய நிலத்திற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பம் பதிவு எண்: **248/1992–1993**, நாள் **23/11/1992** ஆக பதிவு செய்யப்பட்டது. மேலும் மேல்முறையீட்டாளருக்கு சாதாரண வரிசையில் மின் இணைப்பு வழங்க தயார் நிலை பதிவு செய்யும்படி **02/02/2010** நாளிட்ட கடிதத்தின்படி தெரிவிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் விவசாய நிலத்தின் சர்வே எண்.254/5B வேம்பார்பட்டி கிராமத்திலிருந்து சர்வே எண்.236/2 வேம்பார்பட்டி கிராமத்திற்கு மாற்றம் செய்து வழங்கும்படியும், மின் இணைப்பு வழங்க கால அவகாசம் வழங்கும்படியும் விண்ணப்பத்திருந்தார்.

**2.2** மேல்முறையீட்டாளர் சர்வே எண் மாற்றம் செய்யப்பட்டதாகவும் கால நீட்டிப்பு வழங்க உரிய கால அவகாசத்தில் ஆவணங்கள் வழங்கவில்லை என்பதால் அவருக்கு விவசாய மின் இணைப்பு வழங்க இயலாது என அவருடைய மனுவின் மீது எந்த வித நடவடிக்கையும் இல்லாமல் தள்ளுபடி செய்து, **26.09.2017** தேதியிட்ட ஆணை நகல் மேல்முறையீட்டாளருக்கு தபால் மூலம் **19.12.2017** அன்று வழங்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

**2.3** மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

## 3. <u>மன்றத்தின் தீர்வு</u>

3.1 திண்டுக்கல் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 26.9.2017 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"ஆணை*

*திரு. தா.பெ. சுப்புராம், த/பெ தாந்தோனி பெருமாள் அவர்களுக்கு அறிவிப்பது யாதெனில்,*

*கால நீட்டிப்பு அளிக்க உச்ச வரம்பான ஐந்தாண்டுகள் 2.5.2015 அன்று நிறைவடைந்த நிலையில் அதன் பின்னர் தயார் நிலை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் 10.8.2015 அன்று பெறப்பட்டுள்ளதால் இந்த விண்ணப்பதின் மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் உள்ளதால் தங்களது கோரிக்கை இம்மன்றத்தால் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது. "*

## 4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

4.1 விவசாய நிலத்திற்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பம் 23/12/1992, அன்று விண்ணப்பத்தின்படி விண்ணப்ப பதிவு எண்: 248/1992–1993, அன்று நாள் 23/11/1992 விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டது. மேலும் எனக்கு சாதாரண வரிசையில் மின் இணைப்பு வழங்க தயார் நிலை பதிவு செய்யும்படி கடிதம் 02/02/2010 அன்று நாளிட்ட கடிதத்தின்படி தெரிவிக்கப்பட்டது. எனது விவசாய நிலத்தின் சர்வே எண்.254/5B வேம்பார்பட்டி கிராமத்திலிருந்து 236/2 வேம்பார்பட்டி கிராமத்திற்கு மாற்றம் செய்து வழங்கம்படியும், மின் இணைப்பு வழங்க கால அவகாசம் வழங்கும்படியும் விண்ணபத்திருந்தேன். ஆனால், எனக்கு சர்வே எண் மாற்றம் செய்யப்பட்டதாகவும் கால நீட்டிப்பு வழங்க உரிய கால அவகாசத்தில் ஆவணங்கள் வழங்கவில்லை எனவும் எனக்கு விவசாய மின் இணைப்பு வழங்கயியலாகாது என எனது மனுவின் மீது எந்த வித நடவடிக்கையும் இல்லாமல் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்துள்ளனர். எனவே, உரிய காலத்தில் சர்வே எண் மாற்றம், மற்றும் கால அவகாசம் (மின் இணைப்பு வழங்க) ஆணை பிறப்பித்து எனக்கு விவசாய மின் இணைப்பு வழங்க ஆணை வழங்கும்படி மேல்முறையீடு சமர்ப்பித்து கொள்கிறேன்.

**5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் :</u>**

**5.1** திரு P.சுப்புராம் s/o. பெருமாள் நாயுடு கோபால்பட்டி அஞ்சல், திண்டுக்கல் என்ற விலாசத்தில் இருப்பவர். அவருடைய வேம்பார்பட்டி கிராம சர்வே எண். 254/5B யில் அமைந்துள்ள ஆள்துளை கிணற்றுக்கு 10 HP குதிரை திறன் மின் இணைப்பு வேண்டி கடந்த 23.11.1992 ஆம் வருடம் செயற்பொறியாளர்/தெற்கு/திண்டுக்கல் அலவலகத்தில் தனது விவசாய விண்ணபத்தை பதிவு செய்தார். அதன் பதிவு எண்.248/23.11.92 ஆகும்.

**5.2** மேற்படி, விவசாய பதிவு எண் வரிசைப்படி கடந்த 2.2.2010 அன்று திரு சுப்புராம் அவர்கள் உதவி மின்பொறியாளர்/ கோபால்பட்டி பிரிவு அலுவலகத்தில் விவசாய மின் இணைப்பு தயார் நிலை பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டு 90 நாள் கால அவகாச கடிதம் வழங்கியது.

**5.3** இதற்கிடையில் அவருக்கு தயார் நிலை பதிவு செய்ய வழங்கப்பட்ட காலமான 90 நாட்கள் 2.5.2010 அன்று முடிவுற்றது. அதன் பின் திரு.சுப்புராம் அவர்கள் ஏற்கனவே விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்த வேம்பார்பட்டி கிராம சர்வே எண். 254/5B ல் அமைந்துள்ள ஆள்துளை கிணறு தூர்ந்துவிட்டதாகவும் எனவே அவருக்குச் சொந்தமான அதே கிராம சர்வே எண். 236/2 ல் அமைந்தள்ள கிணறுக்கு விவசாய மின் இணைப்பு சர்வே எண் மாற்றம் வேண்டி 8.6.2010 அன்று விண்ணப்பம் செய்தார்.

**5.4** அதன் அடிப்படையில் செயற்பொறியாளர் திண்டுக்கல் அவர்கள் ஆய்வு செய்த போது திரு சுப்புராம் அவர்கள் தகப்பனார் பெயரில் மாறுதல் இருந்ததால் அது தொடர்பான வருவாய் ஆவணங்களை சரி செய்ய கால அவகாசம் வேண்டி 3.3.2011 விண்ணப்பம் அளித்தார்.

**5.5** அதன் பின் திரு.சுப்புராம் சமர்பித்த சரியான ஆவணங்களின் அடிப்படையில் செயற்பொறியாளர்/தெற்கு/திண்டுக்கல் அவர்கள் 29.6.2011 அன்று குறிப்பானை எண். EE/S/D/TA1/F3/D.No. /10.29.6.2011 மூலமாக உத்தரவு வழங்கியது.

**5.6** திரு.சுப்புராம் அவர்கள் சர்வே எண் மாற்றம் செய்த பின் அவருடைய நிலத்திற்கு மின் இணைப்பு பெற ஏற்கனவே வழங்கப்பட்ட தயார் நிலை பதிவு செய்யும் அறிவிப்பு முடிவுற்ற நிலையில் மீண்டும் தயார் நிலை பதிவு செய்ய கோரும் எந்த வேண்டுகோளும் மின் வாரியத்திற்கு வழங்கவில்லை. 2.2.2015 அன்று மேற்படி விண்ணப்பதாரர் மேல்முறையீடு கால நீட்டிப்பு செய்யும் கால அவகாசமான 5 வருடம் முடிவுற்ற நிலையில் தனக்கு உடல் நலமில்லை என்று வெளியூரில்

இருந்ததாகவும் 10.8.2015 அன்று கால நீட்டிப்பு வேண்டி AE/கோபால்பட்டி அவர்களிடம் மனு செய்தார்.

5.7 அவர் காலம் கடந்து விண்ணப்பித்ததால் அவர்கள் கோரிக்கை மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் திரு சுப்புராம் அவர்கள் திண்டுக்கல் மின் பகிர்மான வட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தலைவர் அவர்களிடம் மனு எண் 17/24.11.2016 அன்று மனு செய்தார். அதன் மீது நடைபெற்ற விசாரணையும் நடந்துவிட்டது. விசாரணையில் விவசாய விண்ணப்பம் 5 வருடங்களுக்குள் மாற்றங்கள் செய்து கொள்ளாமல் 5 வருடங்களுக்கு மேல் உள்ள விண்ணப்பத்திற்கு கால நீடிப்பு செய்ய இயலாது என்று 26.9.2017 அன்று குறைதீர்மன்ற தலைவர் திண்டுக்கல் அவர்கள் தீர்வு செய்துள்ளார்.

5.8 அந்த தீர்ப்பின் மீது தற்போது திரு.சுப்புராம் அவர்கள் Tamil Nadu Electricity Ombudsman சென்னையில் மேல்முறையீடு செய்துள்ளார் என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

## 6. மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:

6.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 21.6.2018 அன்று மின்குறைதீர்ப்பாளரின் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

6.2 மேல்முறையீட்டாளர் திரு. தா.பெ. சுப்புராம் அவர்கள் கலந்துகொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6.3 எதிர்மனுதாரர் சார்பில் திரு. S. ராமன், உதவி செயற்பொறியாளர்/நத்தம்(i/c), அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

## 7. மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்

7.1 மேல்முறையீட்டாளர் திரு. தா.பெ. சுப்புராம் அவர்கள் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் சர்வே எண்.254/5Bல் உள்ள தன்னுடைய நிலத்திற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பம் பதிவு எண்.248/92–93 நாள் 23.11.1992 என பதிவு

செய்யபபட்டதாகவும் சாதாரண வரிசையில் மின்இணைப்பு வழங்க தயார்நிலை பதிவு செய்யும்படி 2.2.2010 நாளிட்ட கடிதத்தின்படி பெறப்பட்டதாக தெரிவித்தார்.

7.3 சர்வே எண். 254/5B-ல் உள்ள ஆழ்துளை கிணறு நீர் இல்லாமல் தூர்ந்துவிட்டதால் அதே கிராமத்தில் உள்ள சர்வே எண்.236/2–க்கு விவசாய மின் இணைப்பு மாற்றித்தருமாறு விண்ணப்பம் அளித்ததாகவும் மேற்படி விண்ணப்பத்தில் பிழை இருந்ததால் கிராம நிர்வாக அலுவலரிடம் திருத்தம் செய்ய வேண்டி கால நீட்டிப்பு தர 3.3.2011 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டதாகவும் தெரிவித்தார்.

7.4 விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் சர்வே எண்.254/5B லிருந்து சர்வே எண்.236/2–க்கு மாற்றம் செய்யப்பட்டு 29.06.2011ல் அனுமதி ஆணை பெறப்பட்டதாக தெரிவித்தார். மேலும், மேல்முறையீட்டாளர் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்று வந்ததால் எதிர்மனுதாரர் கேட்ட ஆவணங்களை தர இயலவில்லை எனவும், சிகிச்சை பெற்று வந்தபின் 17.4.2015 அன்று வருவாய் ஆவணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதால் 24.4.2015 லிருந்து 6 மாத காலத்திற்கு காலநீட்டிப்பு தருமாறு விண்ணப்பித்துள்ளதாக தெரிவித்தார். ஆனால், மேல்முறையீட்டாளர் கேட்ட கால நீட்டிப்பு பற்றியும், மின்இணைப்பு பெறுவதற்கான தயார்நிலை பற்றியும் எந்தவித பதிலும் தனக்கு கிடைக்கவில்லை எனவும் தெரிவித்து விவசாய மின்இணைப்பு கொடுக்குமாறு வேண்டியுள்ளார்.

## 8. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 எதிர்மனுதாரர் சார்பில் திரு. S. ராமன், உதவி செயற்பொறியாளர்/நத்தம்(i/c), அவர்கள் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 2010ம் வருடம் 2.2.2010 நாளிட்ட கடிதம் முலம் திரு. சுப்புராம் அவர்கள் உதவி மின் பொறியாளர்/கோபால்பட்டி பிரிவு அலுவலகத்தில் விவசாய மின்இணைப்பு தயார்நிலை பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டு 90 நாள் கால அவகாசம் தரப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்தார். 90 நாட்கள் கால அவகாசம் 2.5.2010 அன்று முடிவுற்றபின் திரு. சுப்புராம் அவர்கள் விவசாய மின் இணைப்பு வேண்டி பதிவு செய்த வேம்பார்பட்டி கிராம சர்வே எண்.254/5B–ல் மைந்துள்ள ஆழ்துளை கிணறு தூர்ந்துவிட்டதால் அவருக்குச் சொந்தமான அதே கிராம சர்வே எண்.236/2–ல் அமைந்துள்ள கிணறுக்கு மின்இணைப்பு சர்வே எண் மாற்றம் வேண்டி 8.6.2010 அன்று விண்ணப்பம் அளித்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

8.3 செயற்பொறியாளர்/தெற்கு/திண்டுக்கல் அவர்கள் ஆய்வு செய்தபோது திரு. சுப்புராம் அவர்கள் தகப்பனார் பெயரில் மாறுதல் இருந்ததால் அது தொடர்பான வருவாய் ஆவணங்களை சரிசெய்ய கால அவகாசம் வேண்டி மேல்முறையீட்டாளர் 3.3.2011ல் விண்ணப்பம் அளித்ததாக தெரிவித்தார். சரியான ஆவணங்கள் பெறப்பட்டு செயற்பொறியாளர்/தெற்கு/திண்டுக்கல் அவர்கள் 29.6.2011 அன்று சர்வே எண் மாற்றம் செய்து உத்தரவு வழங்கினார்.

8.4 சர்வே எண் மாற்றம் செய்தபின் தயார்நிலை பதிவு செய்ய கோரும் எந்த வேண்டுகோளும் மேல்முறையீட்டாளர் மின் வாரியத்திற்கு வழங்கவில்லை.

8.5 தயார்நிலை பதிவு செய்வதற்கு 5 ஆண்டுகள் வரை கால நீட்டிப்பு செய்யும் காலம் 2.2.2015 அன்றுடன் முடிவுற்ற நிலையில் மேல்முறையீட்டாளர் தனக்கு உடல் நலமில்லை என்று வெளியூரில் இருந்ததாக கூறி 10.8.2015 அன்று காலநீட்டிப்பு வேண்டி மனு அளித்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்தார்.

8.6 காலம் கடந்து விண்ணப்பித்ததால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை மீது எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அதன்பொருட்டு மின் நுகர்வோர் குறைதீர்மன்றத்திடம் மேல்முறையீட்டாளர் மனு அளித்திருந்தார். தமிழ்நாடு மின்வாரிய விதிமுறைகளின்படி ஐந்தாண்டுகளுக்கு மேல் தயார்நிலை பதிவு செய்ய காலநீட்டிப்பு செய்ய இயலாது என்று 26.9.2017 அன்று குறைதீர்மன்றம் தீர்வு செய்துள்ளதாக எதிர்மனுதாரர் வாதிட்டார்.

9. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

9.1 இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாகத் தெரிகின்றன.

i) விவசாய விண்ணப்பங்களுக்கு தயார்நிலை பதிவு செய்வதற்கு உரிமம்தாரரின் நிலையாணை மற்றும் குறிப்பாணைகளின்படி தரப்பட்டுள்ள கால அவகாசம் எவ்வளவு ?

ii) மேல்முறையீட்டாளரின் இலவச மின்இணைப்புக்கான கோரிக்கை ஏற்புடையதுதானா ?

**10.** **<u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>**

**10.1** விவசாய மின்இணைப்புகளை பொருத்தவரையில், தயார்நிலையை பதிவு செய்வது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி (Supply Code) மற்றும் பகிர்மான விதி (Distribution Code) தொகுப்பில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமம்தாரர் கூறிய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும்.

**10.2** எதிர்மனுதாரர் விவசாய மின் இணைப்பு கேட்கும் விண்ணப்பதாரர்கள் தங்களின் மனுவின் பேரில் தயார் நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள 90 நாட்கள் முடிந்த 5 வருடங்கள் வரை, தயார்நிலையை பதிவு செய்யலாம் என்று தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் 22.9.2009 நாளிட்ட கடிதத்தை ஆராய விரும்புகிறேன்.

*"1. In cases of delay in reporting readiness of agricultural applications even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/ legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice.*

*2. The applications which were kept pending (except court case/ dispute case) after completing 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant.*

*3. Cancelled applications need not be revoked.*

*4. Applicants whose applications released / readiness entered, but supply was not availed due to court case / dispute supply may be effected without any time limit, if the case is ended in favour of the applicant on priority. The receipt of this letter may be acknowledged."*

**10.3** மேற்கண்ட ஆணையினை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை, ஏற்கனவே வழங்கப்பட்ட ஒருவருட கால அவகாச நீட்டிப்பிற்கு பின்பும் விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரரின் வாரிசுக்கு தங்களது தயார் நிலையை பதிவு செய்ய 90 நாட்கள் அறிவிப்பு கடிதத்தின் காலக்கெடு முடிந்த 5 வருடங்கள் வரை காலநீட்டிப்பு வழங்கலாம் என்று தெரிகிறது. மேலும் இது சாதாரண

வரிசையிலுள்ள (Normal) பதிவு மூப்பின்படி வழங்கப்படும் அறிவிப்புகளுக்குத்தான் பொருந்தும். மேலும் மேற்கண்ட விதி, தயார் நிலையை பதிவு செய்யக்கோரி விடுத்த அறிவிப்பின் 90 நாட்கள் கடந்த பின்பு மேற்கண்ட நிலத்தை வாங்கியவர்களுக்கு பொருந்தாது என்றும் தெரிகிறது. மேலும் 90 நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு 5 வருடங்கள் கழிந்த விவசாய விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது என்றும் தெரிகிறது.

**10.4** மேற்கண்ட தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் **22.9.2009** நாளிட்ட ஆணையின்படி விவசாய விண்ணப்பங்கள் சாதாரண வரிசையின் மூப்பு அடிப்படையில் தயார்நிலையில் பதிவு செய்ய கோரி கொடுக்கப்பட்ட அறிவிப்பிலுள்ள காலக்கெடுவினை 90 நாட்கள் முடிந்த நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை விண்ணப்பதாரர் அல்லது அவர்களின் வாரிசுகள் தங்கள் தயார் நிலையை பதிவு செய்து கொள்வதற்கு கால அவகாசம் வழங்க வாரிய விதிகளில் இடமுண்டு என்று தெரிகிறது.

## **11.** <u>**வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு**</u>

**11.1** இவ்வழக்கில் மேல்முறையீட்டாளர் சாதாரண வரிசையில் மின்இணைப்பு வழங்க தயார்நிலை பதிவு செய்யும்படி அறிவுறுத்திய **2.2.2010** நாளிட்ட கடிதம் கிடைத்ததை மறுக்கவில்லை. அதன் தொடர்ச்சியாகவே சர்வே எண்.254/5B–ல் உள்ள ஆழ்துளை கிணறு தூர்ந்துவிட்டதால் அதே கிராமத்தில் உள்ள மேல்முறையீட்டாளருக்குச் சொந்தமான சர்வே எண்.236/2–ல் உள்ள கிணற்றுக்கு சர்வே எண் மாற்றம் கேட்டுள்ளார். விண்ணப்பத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பிழையை நீக்க வருவாய் துறை கிராம நிர்வாக அலுவலரிடம் திருத்தம் செய்ய வேண்டி கால நீட்டிப்பு கோரி **3.3.2011** தேதியில் கடிதம் கொடுத்துள்ளார். அதன் தொடர்ச்சியாகவே செயற்பொறியாளர்/தெற்கு/திண்டுக்கல் அவர்கள் சர்வே எண்.254/5B–லிருந்து சர்வே எண்.236/2–க்கு மாற்றம் செய்து 29.6.2011–ல் அனுமதி ஆணை வழங்கியுள்ளார். மேலும், மேல்முறையீட்டாளர் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்று வந்ததால் எதிர்மனுதாரர் கேட்ட ஆவணங்களை தர இயலவில்லை எனவும் சிகிச்சை முடிந்து வந்தபின் 17.4.2015 அன்று வருவாய் ஆவணங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதால் 24.4.2015 லிருந்து 6 மாத காலத்திற்கு தயார்நிலை பதிவு செய்ய கால நீட்டிப்பு தருமாறு விண்ணப்பித்துள்ளார். ஆனால், மேல்முறையீட்டாளர் கேட்ட கால

நீட்டிப்பு பற்றியும், மின் இணைப்பு பெறுவதற்கான தயார்நிலை பற்றியும் தனக்கு எந்தவித பதிலும் கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவித்து விவசாய மின்இணைப்பு கொடுக்குமாறு வேண்டுகிறார்.

11.2 எதிர்மனுதாரர் சர்வே எண் மாற்றம் செய்தபின் தயார்நிலை பதிவு செய்ய கோரும் எந்த வேண்டுகோளும் மேல்முறையீட்டாளர் மின் வாரியத்திற்கு வழங்கவில்லை என வாதிடுகிறார். ஆனால், தயார்நிலை அறிவிப்பு கடிதம் கொடுத்து 90 நாட்கள் ஆகிய பிறகுதான் மேல்முறையீட்டாளர் சர்வே எண் மாற்றம் கேட்டு விண்ணப்பித்துள்ளார். சர்வே எண் மாற்றமும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்பின் மேற்கொண்டு மேல்முறையீட்டாளர் செய்யவேண்டிய நடைமுறை செயல்களை எதிர்மனுதாரர் கடிதம் வாயிலாக தெரிவித்திருக்க வேண்டும். மேலும், மேல்முறையீட்டாளர் 3.3.2011 நாளிட்ட கடிதத்தில் காலநீட்டிப்பு கோரியிருந்தும் எதிர்மனுதாரர் கால நீட்டிப்பு அனுமதியோ அல்லது நிராகரிப்போ செய்து பதில் கடிதம் எதுவும் தரவில்லை. மேற்படி கோரிக்கைக்கு பதில் தராதது எதிர்மனுதாரரின் குறைபாடாகும்.

11.3 திண்டுக்கல் மின்நுகர்வோர் மன்ற ஆணையில் மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பத்தின்படி தயார் நிலை பதிவு செய்யவேண்டி அளித்துள்ள 2.2.2010 கடிதத்தின்படி கால நீட்டிப்பு அளிக்கப்படக்கூடிய உச்ச வரம்பான ஐந்தாண்டுகள் 2.5.2015 அன்று நிறைவடைந்த நிலையில் அதன் பின்னர் தயார் நிலை பதிவு செய்வதற்கான விண்ணப்பம் 10.8.2015 அன்று பெறப்பட்டுள்ளதால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் குறைதீர் மன்றத்தில் சமர்பிக்கப்பட்ட எதிர்மனுதாரரின் பதிலுரையில் மேல்முறையீட்டாளர் 02.04.2015ம் தேதியே காலநீட்டிப்பு கோரி மனு செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக திண்டுக்கல் குறைதீர் மன்ற ஆணையில் உள்ள எதிர்மனுதாரரின் பதிலுரையை ஆராய விரும்புகிறேன். அந்த பதிலுரையின் இரண்டாவது பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*எதிர்மனுதாரரின் பதிலுரை—*

*இந்த விண்ணப்பதாரருக்கு சாதாரண வரிசை அடிப்படையில் மின் இணைப்பு வழங்க தயார் நிலை பதிவு செய்யக் கோரி 90 நாள் அறிவிப்பு கடிதம் 02.02.2010 ல் அனுப்பப்பட்டது. தயார் நிலை பதிவு செய்ய 90 நாள் முடியும் நாள் 02.05.2010 ஆகும். இந்த விண்ணப்பதாரருக்கு சொந்தமான*

*ஆழ்குழாய் கிணற்றுக்கு மின் இணைப்பு வேண்டியிருந்தார். ஆனால் அந்த ஆழ்குழாய் கிணறு தூர்ந்து விட்டதாகக் கூறி அவருக்கு சொந்தமான வேறொரு சர்வே எண்ணிற்கு 254/5B–ல் இருந்து 236/2–ல் உள்ள கிணற்றிற்கு மின் இணைப்பு வேண்டி சர்வே மாற்றம் கோரி இருந்தார். சர்வே மாற்றம் கோரிய நாள் 08.06.2010. மேலும் சர்வே மாற்றத்தில் குறைபாடுகள் இருந்ததால் பிரிவு அலுவலகத்திற்கு திருப்பப்பட்டு மறுபடியும் உதவி மின் பொறியாளர் அவர்கள் 07.08.2010 ல் உதவி செயற்பொறியாளர்/நத்தம் அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டு உதவி செயற்பொறியாளர் அவர்களால் 09.08.2010 ல் மறுபடியும் செயற்பொறியாளர் அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டு மேலும் வருவாய் ஆவணங்களில் சில குறைபாடுகள் இருந்ததால் அந்த விண்ணப்பதாரர் சர்வே மாற்றத்திற்குண்டான குறைபாடுகளை சரிசெய்ய காலதாமதம் ஆனதால் தனக்கு கால அவகாசம் வேண்டுமென 03.03.2011 ல் காலநீட்டிப்பு கோரி இருந்தார். குறைபாடுகள் சரிசெய்து சமர்பித்ததால் 29.06.2011 ல் சர்வே மாற்றம் செயற்பொறியாளர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டு விட்டது. <u>இச்சூழ்நிலையில் இந்த விண்ணப்பதாரர் உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் இருந்ததால் அவரால் மீண்டும் கால நீட்டிப்பிற்குண்டான விண்ணப்பம் தர இயலாத சூழ்நிலையில் இருந்ததால் மறுபடியும் வெளியூரிலிருந்து 02.04.2015 ல் காலநீட்டிப்பு கோரி மனு செய்திருந்தார். ஆனால் அப்பொழுது வருவாய் ஆவணங்கள் ஆறுமாத காலம் ஆகியிருந்ததால் மறுபடியும் வருவாய் ஆணங்கள் கிடைக்கப்பெற்று 30.10.2015 ல் சமர்பிக்கப்பட்டுள்ளது.</u> ஆனால் வாரிய விதிகளின்படி இந்த விண்ணப்பதாரர் ஐந்து வருடத்திற்கு முன்பாகவே விண்ணப்பித்துள்ளார் என்று தனது அறிக்கையை சமர்பித்துள்ளார்.*

**11.4** மேற்கண்ட பத்தியில் உள்ள விவரங்களின்படி நாம் அறிவது மேல்முறையீட்டாளர் தாம் உடல் நலமில்லாமல் வெளியூரில் இருந்ததாக கூறி 02.04.2015 அன்றே காலநீட்டிப்பு வேண்டி விண்ணப்பித்துள்ளதையும் ஆனால் அவர் சமர்பித்த வருவாய் ஆவணங்கள் ஆறுமாத காலம் ஆகியிருந்தததால் மறுபடியும் வருவாய் ஆவணங்கள் வாங்கி சமர்பிக்க கால தாமதம் ஆகியுள்ளதையும் அறிய முடிகிறது. இதன் மூலம் தயார் நிலை பதிவு செய்ய வழங்கப்பட்ட உச்ச கட்ட காலஅளவான 5 வருடங்களுக்குள்ளாகவே மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளதையும் அறிய முடிகிறது. அதன்பிறகு வருவாய் ஆவணங்கள் புதியதாக வாங்கி சமர்பிக்க மட்டுமே காலதாமதம் ஆகியுள்ளது. எனவே காலம் கடந்து விண்ணப்பித்ததால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதல்ல.

11.5 பத்தி 11.4–ல் உள்ள விவரங்களின்படி மேல்முறையீட்டாளர் தயார் நிலை பதிவு செய்வதற்கு காலநீட்டிப்பு செய்துகொள்வதற்கான உச்ச வரம்பான ஐந்தாண்டுகள் (02.05.2015) முடிவடைவதற்கு முன்பாகவே அதாவது 02.04.2015 அன்றே கால நீட்டிப்பு கோரி விண்ணப்பம் செய்துள்ளார். அந்த காலநீட்டிப்பு விண்ணப்பத்துடன் சமர்பிக்கப்பட்ட வருவாய் ஆவணங்கள் ஆறு மாதம் ஆகியிருந்த காரணத்தால் மட்டுமே மேல்முறையீட்டாளரின் காலநீட்டிப்பு கோரும் மனுவானது எதிர்மனுதாரரால் எந்தவொரு நடவடிக்கைக்கும் உட்படுத்தப்பட வில்லையெனவும் அறியப்படுகிறது. மேலும் மேல்முறையீட்டாளர் தயார்நிலை அறிவுப்பு கடிதம் (2.2.2010) பெற்ற பின் சர்வே எண் மாற்றம் பெற்றுள்ளார். அதன்பின் உடல்நலமில்லாத நிலையிலும் கால அவகாசம் கேட்டு விண்ணப்பித்துள்ளதின் மூலம் மேல்முறையீட்டாளர் விவசாய மின்இணைப்பு பெறுவதில் உறுதியாக தொடர்ந்து கடிதம் மூலம் எதிர்மனுதாரரிடம் தொடர்பில் இருந்ததை அறியமுடிகிறது. எனவே மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை நிராகரிப்பது சரியல்ல என்று நான் கருதுகிறேன்.

## 12 <u>முடிவுரை</u>

12.1 பத்தி 11.4 மற்றும் 11.5–ல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் உரிமம்தாரர் மேல்முறையீட்டாளருக்கு தயார்நிலையை 30 நாட்களுக்குள் பதிவு செய்யும் அறிவிப்பு செய்து உரிமம்தாரரின் விதிமுறைகளுக்குட்பட்டு மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தீர்வு செய்யப்படுகிறது.

12.2 மேற்கண்ட தீர்வினை இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 60 நாட்களுக்குள் உத்தரவினை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை (compliance report) 75 நாட்களுக்குள் அனுப்ப வேண்டும் என உத்தரவு இடப்படுகிறது.

12.3 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.14/2018 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ.தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. தா.பெ. சுப்புராம்,
த/பெ தாந்தோனி பெருமாள்,
கோபால்பட்டி,
வேம்பார்பட்டி அஞ்சல்,
திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல் – 624 308.

2) செயற் பொறியாளர்,
தெற்கு/திண்டுக்கல்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சி நாயக்கன்பட்டி போஸ்ட்,
திண்டுக்கல்–624 002.

3) உதவி செயற் பொறியாளர்/நத்தம்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணைமின் நிலைய வளாகம்,
கொட்டாம்பட்டி ரோடு, நத்தம்,
திண்டுக்கல்624 401.

4) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
திண்டுக்கல் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மீனாட்சி நாயக்கன்பட்டி போஸ்ட், திண்டுக்கல்–624 002.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

6) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

7) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.